

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | ஜூன் 30, 2022 | புரட்சி 21 | முழக்கம் 24 | விலை: ரூ.3.00


# பொருளாதார வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை ஜாதியே!

இந்தியாவில் பொருளாதாரம், வேலை வாய்ப்புகளில் வளர்ச்சியை நோக்கி முன்னேறிச் செல்வதில், ஜாதி தடையாக நிற்கிறது என்பதை விளக்கி 'The Dravidian Model' புத்தகத்தை எழுதிய முனைவர் கலையரசன் 'இந்து' ஆங்கில நாளேட்டில் (ஜூன் 23, 2022) ஓர் ஆய்வு கட்டுரையை எழுதியுள்ளார். கடந்த 20 ஆண்டுகளாக பொருளாதார வளர்ச்சிப் போக்குகள் காணப்பட்டாலும் அது வேலை வாய்ப்புகளை உருவாக்கவில்லை என்பதால் போராட்டங்கள் வெடித்துக் கொண்டிருக்கின்றன. வேலை வாய்ப்புகளோடு அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கிய பொருளாதார கொள்கைகளை அதற்கான திட்டமிடுதலை கிழக்கு ஆசிய நாடுகளைப் போல இந்தியாவில் ஏன் உருவாக்க முடியவில்லை என்ற கேள்வியை எழுப்பும் அக்கட்டுரை, ஜாதி அரசியலோடு பிணைத்துக் கொண்டுள்ளது தான் மிக முக்கிய காரணம் என்று வலியுறுத்துகிறது.

**முனைவர் கலையரசன்**

கட்டுரையின் மய்யமான கருத்துகளின் சுருக்கம்.

1. இந்தியாவில் ஜாதிக்கும் பொருளாதாரத்துக்கும் நெருக்கமான தொடர்பு இருக்கிறது. பல ஆய்வாளர்கள் இதை கவனத்தில் கொள்வதில்லை. சமகாலஆய்வுகள், எழுத்துகளில்கூட பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் மற்றும் சமூகத்தில் உருவாகும் பிரச்சினைகளுக்கு ஜாதியும் ஒரு காரணமாக இருக்கிறது என்ற கருத்துகளே முன் வைக்கப்படுகின்றன. அது சரியான பார்வையல்ல. உண்மையில் பொருளாதார வளர்ச்சிப் பாதையை தீர்மானிக்கும் மய்யமான அடித்தளமாக ஜாதி தான் இருக்கிறது என்பதுதான் உண்மை.

2. பொருளாதார வல்லுனர்கள் மாறுபட்ட கருத்துகளை முன் வைக்கின்றனர். வளரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு மூலதனக் குவியலின் தேவையை வலியுறுத்துகிறார் நோபல் பரிசு பெற்ற ஆர்தர் லெவிஸ், அவருடன் இணைந்து நோபல் பரிசைப் பகிர்ந்து கொண்ட தியோடர் வில்லியம், நீதிமன்றத்தைவிட, மனித உழைப்பு மூலதனமே முக்கியமானது (Human Capital) என்கிறார். நவீன துறைகளில் மனித உழைப்பு மூலதனமே முக்கிய பங்கு வைக்க முடியும் என்று கூறும் அவர், படித்தவர்களை உழைப்பு சந்தையில் பங்கெடுக்கச் செய்ய வேண்டும். அதன் வழியாக உற்பத்தி அதிகரிக்கும் சிறு தொழிலதிபர்களாக வரும் திறன் மிக்கவர்களுக்கும் வாய்ப்புகள் உருவாகுகின்றன. கல்வி, அதன் வழியாகக் கிடைக்கும் திறன் பயிற்சி பெறும் அனுபவங்கள் கிடைக்கின்றன என்று வாதிடுகிறார்.

3. தெற்கு ஆசிய நாடுகள் வெவ்வேறு அடிப்படையில் தங்கள் பொருளாதாரக் கட்டமைப்பை வளர்த்து வருகின்றன. மக்கள் அனைவரையும் வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு வந்துள்ளன. வெவ்வேறு கொள்கைகள் பின்பற்றப்பட்டாலும் தெற்காசிய நாடுகளில் ஒருஅடிப்படையான அம்சம் மட்டும் பொதுவாக இருக்கிறது. நில உரிமையையும் மனித உழைப்பையும் இணைத்ததால் மட்டுமே வளர்ச்சி சாத்தியமாகியுள்ளது. இந்தியாவை பொறுத்தவரை இந்த மூன்று அம்சங்களுமே கவனத்தில் கொள்ளப்படவில்லை. மாறாக ஜாதி பெரும் தடைச் சுவராக நிற்கிறது.

4. உலகிலேயே நில உரிமையில் மிக அதிகமான ஏற்றத் தாழ்வுகளைக் கொண்டிருக்கும் நாடு இந்தியா. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே அவர்கள் தங்கள் நலனுக்காக நில உரிமைகளில் ஜாதியைப் புகுத்தி விட்டனர். அனைவருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்காமல் இங்கே காலம்காலமாக நிலை பெற்றுள்ள ஜாதி அடிப்படையிலேயே நில உரிமைகளையும் ஆளும் குறுநில மன்னர்கள், சிற்றரசர்களாகும் உரிமைகளும் பரம்பரை ஜாதி அடிப்படையிலேயே பகிர்ந்தளித்ததோடு, தொழிலாளர்களாகவும் கூலிகளாகவும் ஒடுக்கப்பட்ட ஜாதியினரை வைத்திருந்தனர். அதாவது, நில உடைமை யாளர்கள் மேல் ஜாதி; உழைக்கும் மக்கள் 'கீழ் ஜாதி'. கீழ் ஜாதியில் தள்ளப்பட்ட

(4ஆம் பக்கம்)

### ஜாதியின் மூன்று தடைகள்

பொருளாதார வளர்ச்சியை அனைவருக்கும் கொண்டு செல்லக்கூடிய மாற்றத்துக்கு மூன்று அம்சங்கள் தடையாக இருக்கின்றன. ஒன்று நில உரிமைகளில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகள்; இது உற்பத்தியையும் பாதிக்கிறது. இரண்டாவது உயர்கல்வியை வரலாற்று ரீதியாக ஒரு பிரிவினர் மட்டும் தங்கள் ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டு அனைவருக்கும் கிடைத்து விடாமல் மறுத்து வருதல்; மூன்றாவது நவீன தொழில் மற்றும் அறிவியல் துறைகளில் நிகழும் ஜாதியப் பாகுபாடு; இப்போது 'உயர் ஜாதி' அறிவுஜீவி வர்க்கம் தங்களுக்கான 'உறவுத் தொடர்புகளை' வலிமையாக்கிக் கொண்டு மேற்குறிப்பிட்டத் துறைகளை தங்கள் பிடிக்குள் வைத்திருக்கிறது.

– 'கலையரசன்-ஏ' கட்டுரையிலிருந்து

# நடிகர் மாதவனின் பஞ்சாங்க உளறலுக்கு விஞ்ஞானி பதிலடி

பொய்யான வழக்கில் சிறைத் தண்டனை பெற்ற இஸ்ரோ விஞ்ஞானி நம்பி நாராயணனின் வாழ்க்கை வரலாற்றை கருவாக கொண்டு "ராக்கெட்ரி - நம்பி விளைவு" என்ற படத்தை நடிகர் மாதவன் இயக்கி நடித்துள்ளார். இந்தப் படம், ஜூலை 1ஆம் தேதி திரைக்கு வருகிறது.

இதையொட்டி, சென்னையில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்திய நடிகர் மாதவன், "அமெரிக்கா, ரஷ்யா, சீனா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பலகோடி செலவழித்து செவ்வாய்க் கிரகத்துக்கு செயற்கைக் கோளை அனுப்பி வெற்றி பெற்றன. ஆனால், இந்தியா 2014ஆம் ஆண்டு சிறிய எஞ்சினை வைத்துக்கொண்டு செவ்வாய்க்கிரகத்துக்கு செயற்கைக்கோள் அனுப்பியது. செவ்வாய் கிரகத்துக்கு இந்தியா அனுப்பிய களம் 32ஆவது முறையில்தான் வெற்றி பெற்றது. இந்த ராக்கெட்டை விண்ணில் செலுத்தவும், செவ்வாய் கிரகத்தின் சுற்றுப்பாதையை அடைய வும் நமது முன்னோர்கள் உருவாக்கிய பஞ்சாங்கத்தின்படியான நட்சத்திர மற்றும் கோள்களின் வரைபடம்தான் (Celestial Map) இந்தியக் குழுவுக்கு உதவியது" என்று கூறியிருந்தார்.

இந்தத் தகவலை "விஞ்ஞானி நம்பி நாராயணனின் மருமகனும், விஞ்ஞானியுமான அருணன் - தம்மிடம் தெரிவித்தார்" என்றும் மாதவன் குறிப்பிட்டிருந்தார்.

நடிகர் மாதவனின் இந்தக் கருத்துதான் சமூகவலைதளங்களில் தற்போது விவாதங்களைக் கிளப்பி இருக்கிறது.

"ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கணிக்கப்பட்ட பஞ்சாங் கத்தை வைத்துக் கொண்டு தற்போது செவ்வாய்கிரகம் செல்வது முடியாத காரியம்" என தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்திருக்கும் பேட்டியில் 'சந்திரயான்' விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை கூறியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் கூறியிருக்கும் அவர், "பஞ்சாங்கம் ஆண்டாண்டு காலமாக பொருந்தி வரக் கூடியது அல்ல. இது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கணிக்கப்பட்டது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கணிக்கப் பட்ட பஞ்சாங்கத்தை வைத்துக்கொண்டு செவ்வாய்க் கிரகம் செல்வது என்பது முடியாத காரியம். ஏனென்றால், அந்தந்த நேரத்தில் இருக்கக்கூடிய கிரகங்களின் இடங்களை கணித்து அதற்கேற்ப உலகளவில் பயன்படுத்தப்படும் அறிவியல் அட்டவணை இருக்கிறது. அதற்குப் பெயர் 'அல்மனாக்' என்ற அறிவியல் அட்டவணை தான் விஞ்ஞானிகளுக்கு 'பஞ்சாங்கம்'. அதை வைத்தே விண்வெளிக் கோள்களை அனுப்பும் நேரத்தைக் கணக்கிடுகிறோம். ஆனால் இவர்கள் சொல்லும் 'இந்து' பழம் பஞ்சாங்கத்தைப் பார்த்து நேரம் குறிப்பது கிடையாது" என்று பதிலடி தந்துள்ளார்.

# தமிழ்நாடு கிராமங்களில் தலைவிரித்தாடும் ஜாதி வெறி

தமிழ்நாட்டுக் கிராமங்கள் இன்னும் ஜாதி ஆதிக்கப் பிடியில் சிக்கித் திணறிக் கொண்டிருக்கின்றன. தீண்டப்படாத மக்கள் என்று சொல்லப்படுகிற தலித் மக்கள் சுடுகாட்டிற்கு கூட போக முடியாத நிலை உள்ளது. நன்னிலம் அருகே ஒரு முதியவர் (தலித்) இறந்துவிட்டார். அவர் சடலத்தை ஊர் வழியாகக் கொண்டு செல்ல முடியாமல் பாய்ந்து வருகிற முழங்கால் அளவு தண்ணீரில், சடலத்தை சுமந்து வருகிற காட்சியை ஒரு தொலைக்காட்சி ஒளிபரப்பியது.

திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே பேட்டை அடுத்த ராஜாநகரம் என்ற கிராமத்தில், ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த 100 குடும்பங்களுக்கு 25 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாடு அரசு இலவச வீட்டு மனைகளை வழங்கியது. ஆனால், அரசே வழங்கிய அந்த வீட்டு மனைகளை இவர்களால் பயன்படுத்திக் கொள்ளவே முடியவில்லை. 25 ஆண்டுகளாக அருகில் உள்ள வேறு ஜாதியினர் இவர்களை குடிவைக்க விட மாட்டோம் என்று தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டே வருகின்றனர். தற்போது மனித உரிமை ஆணையம் தலையிட்டு வருவாய்த் துறைக்கு உத்தரவிட்டு, திருத்தணி கோட்டாட்சியர் அங்கே சென்று, நில அளவீடுகளை செய்து ஆதி திராவிட மக்களுக்கான வீட்டு மனை பட்டாக்களுக்கு ஒதுக்கீடுகளை செய்துள்ளார். அருகில் உள்ள ஜாதி வெறியர்கள் ஒன்று திரண்டு வந்து இங்கே இவர்கள் குடியிருக்க அனுமதிக்க முடியாது என்று எதிர்த்தனர். ஏதோ அவர்கள் வீட்டைப் பிடுங்கிக் கொண்டது போல, அரசு வழங்கிய மனைகளில் கூட குடியிருக்க விடாது மறுக்கும் அளவிற்கு ஜாதி வெறியை 'மண்டையில்' ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஜாதி வெறியோடு மூன்று பேர் சாலை மறியல் செய்து கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் மீது மிக மிகக் கடுமையான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.

ஒட்டு மொத்த கிராமத்தினுடைய ஜாதிய மனப்பான்மையைத் தடுக்க வேண்டும். அதற்காக ஒட்டு மொத்த கிராமத்திற்கு அரசு வழங்கக்கூடிய சலுகைகள், இத்தகைய தீண்டாமையில் ஈடுபட்டால் நிறுத்தப்படும் என்று அந்த உறுதியுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு இயக்கங்களும் களமிறங்கிப் போராட வேண்டும்.

ஒரு ஆட்சியோ, அரசு இயந்திரமோ இவைகளை முழுமையாக செய்து முடித்து விடும் என்று நாம் எதிர்பார்க்கக் கூடாது. எனவே, இயக்கங்களும், ஆட்சியும் கைகோர்த்துக் கொண்டு, கிராமங்களை செல்லரித்துக் கொண்டிருக்க கூடிய ஜாதி வெறிக்கு முற்றுப் புள்ளி வைக்க முன்வர வேண்டும்.

# சனாதனவாதிகள் அப்படி பெரியாரிஸ்ட்டுகள் இப்படி

“மதம் மாறுவது தேச விரோதம், ஆனால், வாக்காளர்களுக்கு துரோகம் செய்து விட்டு கட்சி மாறுவது மட்டும் தேச பக்தியா?” என்று ஒரு பா.ஜ.க. ‘ஜீ’யிடம் கேட்டேன். அவரிடம் பதில் இல்லை.

“‘சனாதன தர்மம்’ என்கிறீர்கள், அதற்கு என்ன அர்த்தம்” என்று கேட்டேன்; “என்றும் மாறாதது, நிலையானது” என்றார். “அப்படியானால் ஆட்சிகள் மாறுவதே சனாதனத்துக்கு எதிரானதா” என்று கேட்டேன்; “இது என்ன விதண்டாவாதம்?” என்றார்.

“சரி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிகளைக் கவிழ்க்கலாம்; அதற்கு எம்.எல்.ஏ.க்களை விலை பேசலாம்; சொகுசு ஓட்டல்களில் அடைத்து வைக்கலாம்; இதுவே பாரத பண்பு என்று உங்களது வேதமும் முனிவர்களும் ரிஷிகளும், எந்த புனித நூலிலாவது பறை சாற்றியிருக்கிறார்களா?” என்று கேட்டேன்.

“இதுக்குப் போய் அவுங்களையெல்லாம் இழுக்காதீங்கன்னு” கொஞ்சம் ஆவேசமாகவே கேட்டார்.

“ரிஷிகளும் முனிவர்களும் காட்டிய ஆன்மீகப் பாதையில் தான் உங்க பா.ஜ.க. நடைபோடுகிறதா” என்று கேட்டேன்; கோபம் கொப்பளித்தது; “ஆமாம். அதில் என்ன சந்தேகம்” என்றார்.

“அப்படின்னா இதற்கு பதில் சொல்லுங்க.”

“மகாராஷ்டிர கட்சி எம்.எல்.ஏ.க்களைக் கடத்தி, உங்க கட்சி தங்க வைத்துள்ள அசாம் சொகுசு ஓட்டலின் ஒரு நாள் அறை வாடகை என்ன தெரியுமா? ரூ.56 இலட்சம்; மசாஜ் கிளப், நீச்சல் குளம் உள்ளிட்ட அத்தனை சொகுசு வசதிகளையும் அனுபவிக்கிறார்கள். ஸ்ரீராம பகவான் வனவாசம் போனார். அவர்களின் சீடர்கள் 5 நட்சத்திர ரிசார்ட்டுகளுக்குப் போகலாமா? இதுதான் ராம பக்தியா?” என்று கேட்டேன்.

பதில் கூற முடியாமல், ‘அபத்தம்; அபத்தம்’ என்று கத்தினார். ‘ஜெய் ஸ்ரீராம் ஜெய் ஸ்ரீராம்’ என்று மூச்சுப் பிடிக்க முழங்கிக் கொண்டே நடையைக் கட்டினார்.

ஆமாம்! இப்போது எல்லாம் ‘ரிசார்ட் அரசியல்’ என்ற கலாச்சாரம் வந்திருக்கிறது. அங்கே கடத்தப்படுகிறவர்கள் அரசியலில் விலை போகும் ‘பக்கா ஆன்மீக வாதிகள்’. அந்த ரிசார்ட்டில் அனுமார் கோயில் இருக்குமா? அங்கே ‘தவம்’ செய்ய வசதி உண்டா? பூஜை புனஸ்காரங்களுக்கு ஏற்பாடு செய்வார்களா? என்று எந்த ‘தேச பக்தரும்’ கேட்டதாகத் தெரியவில்லை. தேசபக்தியின் விலை, ஜனநாயக சந்தையில் எகிறிப் போய் நிற்கிறது,.

இது சீரழிவின் உச்சம் என்கிறார், மக்களவையின் முன்னாள் பொதுச் செயலாளர் பி.டி.டி. ஆச்சாரி. அதனால் என்ன இருக்கட்டுமே! ஆட்சியைப் பிடிக்க வேண்டாமா என்று சனாதனவாதிகள் அப்படியே கடந்து போய் விடுகிறார்கள்.

இப்ப, பெரியார் தொண்டர்களை நினைத்தால் தான் பரிதாபம்; திராவிடர் விடுதலைக் கழகம் 50 இளைஞர்களுக்கு 4 நாள் கொள்கைப் பயிற்சி நடத்தப் போகிறதாம்; இதற்கு மொத்தமாக ஆகும் ஒரு இலட்சம் ரூபாய் செலவுக்கு என்ன செய்வது என்று விழிபிதுங்கி நிற்கிறார்கள். பிழைக்கத் தெரியாத பெரியார் தொண்டர்கள். சனாதன தர்மம் பேசினால், ஆன்மீகம் பேசினால் இப்படி எல்லாம் சொகுசு வாழ்க்கை கிடைக்கும் என்பது, அவர்களுக்கும் தெரியும். ஆனாலும் அந்தப் பக்கம் தலை வைத்துக்கூட படுக்க மாட்டோம் என்று கொள்கைக்காக அடம் பிடிக்கிறார்கள்!

கொள்கை, பொதுத் தொண்டு, இலட்சிய வாழ்க்கை என்று விடாப்பிடியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பெரியார் அப்படி கற்றுக் கொடுத்து போய் விட்டார். காரணம், அவர் ரிஷியாகவும் முனிவராகவும் வேடம் போட விரும்பியது இல்லை!

– கோடங்குடி மாரிமுத்து

# உட்கட்சி மோதல் : அ.தி.மு.க. பாடம் கற்குமா?

ஊடகங்கள் நான்கு நாட்களாக கொண்டாடி மகிழ்கின்றன. ஈபிஎஸ், ஓபிஎஸ் - ஓபிஎஸ், ஈபிஎஸ். இந்த மோதல் செய்தி தான் தமிழ்நாட்டு மக்களின் ஆதார சுருதியான பிரச்சனைப் போல் சித்தரிக்கப்பட்டு வருகின்றன. இரண்டு தரப்பினரும் ஒரே கருத்தைக் கூறிக்கொண்டு வருகின்றன. “இது புரட்சித் தலைவி அம்மா அவர்களால் உருவாக்கப்பட்ட இயக்கம், ஒன்றரை கோடி தொண்டர்களை கொண்டிருக்கிற இயக்கம், தொண்டர்கள் தான் முடிவெடுப்பார்கள், இதை யாராலும் அசைக்கவோ, ஆட்டவோ முடியாது” இது இரு தரப்பும் பேசுகிற வசனம். ஊடகங்கள் இதையே திருப்பித் திருப்பி பரப்புகின்றன. தவிர, இதனுடைய வரலாற்றுப் பின்னணியைப் பற்றி ஆராய்வதற்குத் தயாராக இல்லை.

சரி பார்ப்போம்.

புரட்சித் தலைவிகளின் விசுவாசிகள் என்று இரண்டு பேரும் கூறுகிறார்கள். அந்த புரட்சித் தலைவி ஜெயலலிதா கூட கடைசி காலத்தில், எம்.ஜி.ஆர். படத்தை போடுவதற்குக் கூட எதிர்ப்புத் தெரிவித்தவர் தான். எம்ஜிஆரை ஓரம் கட்டியவர் தான். அதற்குப் பிறகு புரட்சித் தலைவியின் தலைமையின் கீழ் கட்சியை பங்கு போடுவதற்கு பலரும் வந்தார்கள். அதில் ஓபிஎஸ், ஈபிஎஸ் போன்றவர்களும் இருந்தார்கள். ஜெயலலிதா கூட ஊழலுக்கு அப்பாற்பட்டவர் அல்ல. அரசுக்கு சொந்தமான டான்சி நிலங்களை சட்டத்துக்குப் புறம்பாக முதல்வர் பதவியில் இருந்து கொண்டே அவர் விலை கொடுத்து வாங்கினார். நீதிமன்றத் தீர்ப்பிற்குப் பிறகு அதை அரசிடமே ஒப்படைத்தார். இது வரலாறு. சொத்துக் குவிப்பு வழக்கில் அவர் தண்டிக்கப்பட்டார். தேர்தலில் நிற்பதற்கும் தடை விதிக்கப்பட்டது. ஆனால் உடல் நலம் சரியில்லாமல் அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டதன் காரணமாக அவர் சிறைக்குப் போக முடியவில்லை. அவர் மருத்துவமனையிலேயே மரணத்தை சந்தித்து விட்டார். இல்லாவிட்டால் அவரும் சிறையில் தான் இருந்திருப்பார்.

அவருக்கு ஊழல் செய்ய உதவியதாக சசிகலா, இளவரசி, திவாகர் ஆகியோர் தண்டிக்கப்பட்டு பெங்களூர் சிறையில் 4 ஆண்டு இருந்துவிட்டு விடுதலையாகி, இப்போது தியாகத் தலைவி என்ற பட்டத்தோடு உலா வந்து கொண்டு இருக்கிறார். ஜெயலலிதா மறைவிற்குப் பிறகு ஓபன்னீர் செல்வம் முதலமைச்சராக்கப்பட்டார். சசிகலா முதல்வர் பதவியை கைப்பற்றுவதற்கு முன் இடைக்கால ஏற்பாடாக இது நடந்தது. சசிகலா மீண்டும் முதலமைச்சர் பதவியேற்கும் நிலையில் ஒன்றிய பாஜக ஆட்சி சதி செய்து, ஆளுநரை முடக்கிப் போட்டு, பிறகு இழுத்தடித்துக் கொண்டே இருந்தது. கூவத்தூர் நாடகங்கள் நடந்தன. பிறகு ஒரு கட்டத்தில், கட்சிகள் இரண்டாக உடைந்தன. மோடி தலையிட்டார். மோடி இரண்டு தரப்பையும் ஒன்றாக்கி அதை தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதில் ஓரளவு வெற்றியும் பெற்றார்.

இந்த நிலையில் எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சர் ஆனதற்குப் பிறகு, தனது ஆட்சியின் மீது நம்பிக்கை கோரும் தீர்மானத்தை சட்டசபையிலே கொண்டு வந்தார். இந்த ஆட்சியின் மீது நம்பிக்கை இல்லை என்று சொந்த கட்சிக்கு எதிராகவே ஓ பன்னீர் செல்வமும் அவருடன் இருந்த 11 சட்டமன்ற உறுப்பினர்களும் வாக்களித்தனர். இது கட்சி மாறல் தடைச் சட்டத்தின் கீழ் குற்றம். அந்த வழக்கு அப்படியே உச்சநீதிமன்றத்தில் கிடப்பில் போடப்பட்டு விட்டது.

எடப்பாடி பழனிச்சாமி ஊழலுக்கு அப்பாற்பட்டவரா என்று கேட்டால், முறைகேடாக டெண்டர்களை வழங்கிய குற்றச்சாட்டின் கீழ் அவர் மீது அடிப்படை ஆதாரங்கள் இருக்கிறது, ஊழல் புகார் இருக்கிறது. இதை சி.பி.அய். விசாரிக்க வேண்டும் சென்னை உயர்நீதிமன்றம் கூறியதற்குப் பிறகு, உச்சநீதிமன்றம் சென்று சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு தடை வாங்கி வைத்திருப்பவர்தான் எடப்பாடி பழனிச்சாமி.

எனவே, ஜெயலலிதாவாக இருந்தாலும், ஓபிஎஸ் ஆக இருந்தாலும், ஈபிஎஸ் ஆக இருந்தாலும் அத்தனை பேருமே அதிகாரத்தை பங்கு போடவும், சொத்துக்களைக் குவிப்பதற்கும் அரசியலுக்கு வந்தவர்களே தவிர இவர்களுக்கான கொள்கைகள், அடையாளங்கள், இலட்சியங்கள் எதுவுமே கிடையாது. இன்னும் சொல்லப் போனால், பாஜக வின் ஊதுகுழலாக தமிழ் நாட்டை மாற்றி அமைத்த மகத்தான துரோகத்தில் நிச்சயம் இவர்களுக்குப் பங்கு உண்டு.


பெரும் எண்ணிக்கையில் வாக்காளர்களை தன்னுடைய கைக்குள் வைத்திருக்கிற கட்சி அ.தி.மு.க. என்பதால், பாஜக வை தமிழ்நாட்டிற்குள் கால் ஊன்ற விடாமல் தடுப்பதற்கு இக் கட்சியின் இருத்தல் என்பது அவசியமாகிறது என்பதைத் தவிர இந்த பிளவுக்கு வேறு எந்த அரசியல் முக்கியத்துவமும் இல்ல என்பதே நமது கருத்து. இனியாவது பா.ஜ.க.வை எதிர்த்தால் மட்டுமே தமிழ்நாட்டில் அரசியல் செய்ய முடியும் என்ற முடிவுக்கு எந்த ஒரு பிரிவினரும் துணிவுடன் முன் வருவார்களா என்று தெரியவில்லை.

“அழுகிய தேங்காய் உடைந்த பின் எந்த மூடி எந்த பக்கம் இருந்தால் என்ன பயன் ?”

# பக்தர்களை ஏமாற்றி ரூ. 20 கோடி கொள்ளை; அப்சல்பூர் அர்ச்சகர்கள் தலைமறைவு

அரசுக் கட்டுப்பாட்டில் இயங்கும் கோயில் பெயரில், அந்தக் கோயிலின் அர்ச்சகர்களே போலி இணையதள முக வரிகளை உருவாக்கி பக்தர்களிடமி ருந்து ரூ. 20 கோடி அளவுக்கு கொள்ளை யடித்த சம்பவம் நடந்துள்ளது. கல்புர்கி மாவட்டம் அப்சல்பூரில் இருக்கும் தாத்தரேயா கோயில் தென் னிந்தியாவில் பிரசித்தி பெற்ற கோயில் களில் ஒன்றாக கருதப்படுகிறது. இந்நிலையில், இந்தக் கோயிலில் இளம் அர்ச்சகர்களாக பணிபுரிந்து வந்த வல்லப் பூஜாரி, அன்குர் பூஜாரி, பிரதிக் பூஜாரி, கங்காதர் பூஜாரி மற்றும் சரத் பட் ஆகிய 5 பேர், சிறப்பு பூஜைக்கு ஆன் லைன் மூலம் முன்பதிவு செய்யலாம் என்றும் இதற்கு ரூ.10 ஆயிரம் முதல் ரூ. 50 ஆயிரம் வரை கட்டணம் செலுத்த வேண்டும் என்றும் கூறி பக்தர்களிடம் பணவசூல் செய்து வந்துள்ளனர். கோயிலுக்கு என்று இருக்கும் அதிகாரப் பூர்வ இணையதளத்தின் ‘லிங்கை’ப் பகிராமல், தாங்கள் தனியாக உருவாக்கிய இணையதளத்தின் ‘லிங்கை’ப் பகிர்ந்துள்ளனர். இந்த வகையில் 5 அர்ச்சகர்களும் கடந்த 7 ஆண்டுகளில் மொத்தம் ரூ. 20 கோடி ரூபாயைச் சுருட்டியுள்ளனர். கோயில் இணை ஆணையர் யஷ்வந்த் குருகர் இந்த முறைகேடுகளைத் தற்போது வெளிச்சத்திற்குக் கொண்டு வந்த நிலையில், அர்ச்சகர்கள் 5 பேரும் தற்போது தலைமறைவாகி விட்டதாக கூறப்படுகிறது.

## கடவுளைக் காப்பாற்றிக் கொண்டு ஏழ்மையை ஒழிக்க முடியுமா?



பொருளாதார ஏழைமை, செல்வ பேதம் ஒழிய வேண்டுமானால் அவைகளின் உற்பத்தி ஸ்தானம், அதாவது தோன்றுமிடமும், காப்பு இடமும் ஒழிக்கப்பட வேண்டும். ஏழைமைக்கும் செல்வத்திற்கும் கர்த்தாவும், காவலும் கடவுளாய் இருக்கிறது. அப்படிப்பட்ட கடவுளைக் காப்பாற்றிக் கொண்டு, அல்லது அக் கடவுள் ஆணைக்கு அடங்கினவனாய் இருந்து கொண்டு, கடவுள் தன்மையை – செயலை – கட்டளையை நீ எப்படி மீற, சமாளிக்க, தாண்ட முடியும் என்று சிந்தித்துப் பார்.

அதனால்தான் மனித சமுதாய சமத்துவத்திற்கும் மதம் ஒழிக்கப்பட வேண்டியது எப்படி அவசியமோ, அதுபோல் பொருளாதார சமத்துவத்திற்கும், அதாவது பொருளாதாரச் சமத்துவம் வேண்டுமானால் பொருளாதாரப் பேதத்துக்கும் பேதத் தன்மைக் காப்புக்கும் ஆதாரமாய் இருக்கின்ற கடவுள் தன்மை ஒழிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

‘குடி அரசு’ – 10.03.1945

## அன்று குலக் கல்வி; இன்று தேசியக் கல்வி (2)

# குலக் கல்வியை முறியடிக்க பெரியார் தொண்டர்கள் போட்ட இரத்தக் கையெழுத்து

*கோவை காரமடையில் தேசியக் கல்வியையும் குலக் கல்வியையும் ஒப்பிட்டும் குலக் கல்வி எதிர்ப்பு வரலாற்றை விளக்கியும் பொறியாளர் மு. செந்திலதிபன் ஆற்றிய உரை.*

*இராஜகோபாலாச்சாரி - தன்னிச்சையாகக் கொண்டு வந்த குலக் கல்வித் திட்டத்தை எதிர்த்து தமிழகத்தில் எழுந்த போராட்ட வரலாறு மற்றும் அரசியல் சூழலை விளக்கு கிறார். (சென்ற இதழ்த் தொடர்ச்சி)*

**மு. செந்திலதிபன்**

**கம்யூனிஸ்ட் கட்சியின் துரோகம் :** சட்டமன்றத்தில் குலக்கல்வித் திட்டத்தை நிறுத்தி வைத்து ஒரு நிபுணர் குழு அமைத்து பரிசீலனைக்கு அனுப்ப வேண்டும் என்று ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. தீர்மானத் திற்கு ஆதரவாக 139 வாக்குகள் பதிவாகின. எதிராக 137 வாக்குகள் எதிராக விழுந்தன. 2 வாக்குகள் வித்தியாசத்தில் ராஜாஜி அரசு தோல்வி அடைந்தது. எனவே ராஜாஜி அரசு பதவி விலக வேண்டும் என்று சட்டமன்றத்தில் எதிர்க் கட்சிகள் குரல் கொடுத்தன.

அந்த நேரத்தில் சட்டமன்றத்தில் எதிர்க் கட்சியாக இருந்த கம்யூனிஸ்ட் கட்சி சார்பில், புதிய கல்வித் திட்டத்தை அதாவது குலக்கல்வித் திட்டத்தை அரசு கைவிட வேண்டும் என்று ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. ஏற்கனவே கல்வித் திட்டத்தை நிறுத்தி வைக்க வேண்டும் என்ற தீர்மானம் வெற்றிபெற்று இருக்கிறது.

சட்டமன்ற உறுப்பினர்கள் சிலரும் அவைக்கு வரவில்லை. அதனால் உங்கள் தீர்மானத்தை கைவிடுங்கள் என்று பலரும் கம்யூனிஸ்ட் கட்சியை வலியுறுத்தினார்கள். ஆனால் கம்யூனிஸ்ட் கட்சி தனது தீர்மானத்தைக் கைவிட மறுத்துவிட்டது. தீர்மானம் வாக்கெடுப்புக்காக விடப்பட்ட போது, ஆதரவாக 138 வாக்குகளும், எதிராக 138 வாக்குகளும் விழுந்தன. இறுதியில் சட்டமன்றத் தலைவர் தன்னுடைய வாக்கை அரசுக்கு ஆதரவாக அளித்து, அரசை வெற்றிபெறச் செய்து கம்யூனிஸ்ட் தீர்மானத்தைத் தோற் கடித்தார்.

கம்யூனிஸ்ட் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டு விட்டதால் ராஜாஜி அரசு பிழைத்துவிட்டது. கம்யூனிஸ்ட் கட்சி தனது தீர்மானம் வெற்றி பெறுவதற்கு முயற்சி செய்யவில்லை. கம்யூனிஸ்ட் கட்சி எம்.எல்.ஏ.க்கள் பலர் அன்று சபைக்கு வர வில்லை. சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், கம்யூனிஸ்ட் சட்டமன்ற கட்சித் தலைவருமான தோழர் பி.இராமமூர்த்தியும் சட்டமன்றம் செல்லவில்லை. இந்த நிலையில்தான் கம்யூனிஸ்ட் கட்சி, ராஜாஜி அரசின் குலக் கல்வித் திட்டத்திற்கு எதிராகக் கொண்டுவந்த தீர்மானம் தோல்வி அடைந்தது. ராஜாஜி இதனால் உற்சாகம் அடைந்தார்.

கம்யூனிஸ்ட் கட்சியைக் கடுமையாக எதிர்த்துவந்த ஆச்சாரியார், அதன்பிறகு தனது எதிர்ப்பை குறைத்து விட்டார். வரலாற்றில் கம்யூனிஸ்ட் கட்சி அப்போது செய்த தவறு இது. தந்தை பெரியாரை சமாளிக்க வேண்டும் என்பதற்கு ராஜாஜி திட்டம் தீட்டினார்.

குலக்கல்வி எதிர்ப்புக் கிளர்ச்சி நடத்திய திராவிடர் கழக தோழர்கள் மீது காங்கிரஸ் காரர்கள் தாக்குதல் நடத்தினார்கள். காங்கிரஸ் காரர்கள் கலகம் செய்தால் காவல்துறை தலையிடாது என்று வெளிப்படையாகவே ராஜாஜி அறிவித்தார்.

ராஜாஜியின் அரசு காலித்தனத்திற்குப் பச்சைக் கொடி காட்டியதால், பார்ப்பனர்களும், ஆச்சாரியாரின் அடிவருடிகளும் துணிவு பெற்றார்கள். இதன் உச்சகட்டமாக திருச்சி பெரியார் மாளிகைக்கு தீ வைக்கத் துணிந்து விட்டனர். அங்கிருந்து கழகத் தோழர்கள் அந்தக் காலிகளை பெட்ரோல் தீ பந்தத்துடன் கையும் களவுமாகப் பிடித்து வைத்தனர். சுற்றுப் பயணத்தில் இருந்த தந்தை பெரியார் உடனடியாக திரும்பினார். காவல்துறையில் கொடுக்கப்பட்ட புகார் குப்பைக் கூடைக்குப் போனது.

ராஜாஜி கொக்கரித்தார். இப்போது நடப்பது தேவர் - அசுரர் போராட்டம் என்று குலக்கல்வி எதிர்ப்புப் போராட்டத்தை ராஜகோபாலாச்சாரியார் வர்ணித்தார்.

தந்தை பெரியார் பதிலடி கொடுத்தார். ஆம்! இது ஆரிய - திராவிட போராட்டம் தான் என்று



விடுதலையில் எழுதினார்.

ராஜாஜி சர்க்கார் எல்லை மீறி போனபோது தான் 1953 நவம்பர் மாதத்தில் சேலம் மாவட்டம், ஆத்தூரில் நடந்த சுயமரியாதை இயக்க திராவிடர் கழக மாநாட்டில், திராவிடர் கழகத்தினர் கத்தி வைத்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**அக்கிரகாரத்தைக் கொளுத்துவோம் :** அதன் பிறகும் ராஜாஜி அரசு அடக்குமுறையை நிறுத்தவில்லை. அப்போதுதான் தந்தை பெரியார் ஒரு அறிவிப்பை வெளியிட்டார். இதுவரை சட்டத்திற்கு உட்பட்டு போராடி வந்த நான் இனி சட்டத்தை மீறியாவது குலக்கல்வியை ஒழிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன்.

பெட்ரோலும் தீப்பந்தமும் கையில் வைத்துக் கொள்ளுங்கள். நான் அறிவிக்கும் போது அக்கிரகாரத்தைக் கொளுத்துங்கள் என்று பெரியார் ஆணையிட்டார். இது மாதிரி யெல்லாம் அறிவிக்கின்ற துணிச்சல் இந்திய வரலாற்றில் தந்தை பெரியாரைத் தவிர வேறு எந்தத் தலைவரையும் காண முடியாது.

பெரியாரின் அறிவிப்பில் பார்ப்பனர்கள் நடுங்குகிறார்கள். ‘திருப்பித் தாக்குங்கள்’ என்று கல்கி கிருஷ்ணமூர்த்தி எழுதி பார்ப்பனர்களைத் தூண்டி விட்டார். இந்து பத்திரிக்கை துள்ளிக் குதித்தது. பெரியார் கூறியபடி, ஆரிய - திராவிடப் போர் உக்கிரமானது.

பெரியார் நடத்தியப் போராட்டங்களால் காங்கிரஸ் கட்சிக்கு உள்ளேயே ராஜாஜிக்கு எதிர்ப்புத் தீவிரமானது. பெருந்தலைவர் காமராசர், தந்தை பெரியாரின் போராட்டம் நியாயமானது என்று உணர்ந்தார். ‘குலக்கல்வித் திட்டம் உருப்படாது; பயனும் அளிக்காது’ என்று பேசத் தொடங்கினார். ஓமந்தூரார், “தற்போதுள்ள படிப்பும் இல்லாமல் போய்விடும்” என்று கூறினார்.

உழைப்பாளர் கட்சி தலைவரும், பின்னாளில் திமுகவின் முக்கிய தளகர்த்தகராக பேறிஞர் அண்ணா அவர்களுக்குத் துணை நின்றவருமான ஏ.கோவிந்தசாமி, சட்டமன்றத்தில் புதிய கல்வித் திட்டத்தைப் புகுத்திய ராஜாஜியை கடுமையாக எதிர்த்தார். ராஜாஜிக்கு எதிராக காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களும், டாக்டர் வரதராஜுலு நாயுடுவும், பிரதமர் பண்டித நேருவிடம் புகார் அளித்தனர். ராஜாஜி அரசுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டது. பிரதமர் நேரு ராஜாஜியை முதல்வராக தொடர அனுமதி அளித்தாலும், நிலைமை இங்கு சரியில்லை.

**இரத்த கையெழுத்து:** குலக்கல்வித் திட்டத்தை அடியோடு ஒழித்துக்கட்ட தந்தை பெரியார் இறுதியாகப் போராட்டம் அறிவிக்க முடிவு செய்து, போராட்டத்தில் கலந்துகொள்ள திராவிடர் கழகத் தோழர்கள் இரத்தத்தில் கையெழுத்து இட்டு அனுப்புங்கள் என்று ஆணை பிறப்பித்தார். திராவிடர் கழகத்தினர் இரத்தக் கையெழுத்து போட்டு அனுப்பிய கடிதங்கள் குவிந்தன.

இந்த நிலையல்தான் ஈரோட்டில் 1954 ஜனவரி 23, 24 தேதிகளில் புத்தர் கொள்கை பிரச்சார மாநாடு - குலக்கல்வி எதிர்ப்பு மாநாட்டை பெரியார் நடத்தினார். அண்ணாமலை பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் எஸ்.ஜி.மணவாள ராமானுஜம் தலைமையில் நடந்த அந்த மாநாட்டில் மூன்று மாதத்திற்குள் புதிய கல்வித் திட்டத்தை ராஜாஜி அரசு திரும்பப்பெற வேண்டும் என்று கெடு விதித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1954 மார்ச் 27, 28 தேதிகளில் நாகப்பட்டினம் அவுரி திடலில் சென்னை மாநில விவசாய மாநாடு நடந்தது. மாநாடு முடிந்து மறுநாள் பெரியார் அறிவித்தவாறு குலக்கல்வி எதிர்ப்புப் படை தஞ்சை மாவட்ட திராவிடர் கழக தலைவர் நீடாமங்கலம் அ.ஆறுமுகம் தலைமை யில் புறப்பட்டது.

குலக்கல்வி எதிர்ப்புப் படைக்கு பட்டுக் கோட்டை டி.வி.டேவிஸ் தளபதியாக இருந்து வழிநடத்த 29 தோழர்களுடன் நாகை அவுரி திடலில் நடந்த மாநாட்டிலிருந்து புறப்பட்டு விட்டது படை. நாகையிலிருந்து சென்னை வரை சென்ற குலக்கல்வி எதிர்ப்புப் படை செல்லும் வழியெங்கும் ராஜாஜியின் குடிகெடுக்கும் குலக்கல்வித் திட்டத்தின் தீய நோக்கத்தை மக்களிடம் பரப்புரை மேற்கொண்டது.

ராஜாஜியின் குலக்கல்வித் திட்டத்திற்கு எதிராக பெரியார் மூட்டிய தீ பற்றி எரிந்தது. வேறு வழியில்லாமல் ராஜாஜி முதல்வர் பதவியிலிருந்து விலக வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. குலக்கல்வித் திட்டத்தை வடித்துக் கொடுத்த கல்வி ஆலோசகர் ஜி.ராமச்சந்திரன் பதவி விலகினார்.

காங்கிரஸ் சட்டமன்ற புதிய தலைவரைத் தேர்வு செய்ய காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் கூடியது. முதல்வர் பதவிக்கு போட்டி யிட்ட பெருந்தலைவர் காமராசர் 93 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து, ராஜாஜி ஆதரவுடன் போட்டியிட்ட சி.சுப்பிரமணியம் 41 வாக்குகள் மட்டுமே பெற்று தோல்வி அடைந்தார்.

பெருந்தலைவர் காமராஜர், முதல்வர் பதவி ஏற்ற நிலையில், நாகப்பட்டினத்திலிருந்து புறப்பட்ட குலக்கல்வித் திட்ட எதிர்ப்புப் படை 600 மைல்கள் பிரச்சார பயணம் மேற்கொண்டு, மக்களிடையே எழுச்சி ஏற்படுத்தி, சென்னை வந்தடைந்தது. முதல்வர் காமராசர் அவர்களை சென்னை கோட்டையில் குலக்கல்வி எதிர்ப்புப் படையின் சார்பில் நீடாமங்கலம் அ.ஆறுமுகம், படைத் தளபதி டி.வி.டேவிஸ், க.ராஜாராம், எம்.கே.டி.சுப்பிரமணியம், டி.எம்.சண்முகம் ஆகியோர் சந்தித்தனர்.

அவர்களை அன்போடு வரவேற்ற முதல்வர் காமராஜர் உங்கள் கோரிக்கையை இந்த அரசு நிறைவேற்றும் என்று தந்தை பெரியாரிடம் கூறுங்கள் என்றார்.

தந்தை பெரியாரின் போராட்டத்திற்கு வெற்றி பெறும் சூழலும் கனிந்தது. 1954 மே 18ஆம் தேதி குலக்கல்வித் திட்டத்தை திரும்பப் பெறு வதாக முதலமைச்சர் காமராசர் அறிவித்தார். ராஜாஜிக்கு ஆதரவாக ஓராண்டு காலமாக எந்த சி.சுப்பிரமணியம் குலக்கல்வித் திட்டத்தை ஆதரித்துப் பேசினாரோ அவரையே கல்வி அமைச்சராக்கி, அவர் வாயாலேயே திரும்பப் பெறுகிறோம் என்று சட்டப் பேரவையில் அறிவிக்கச் செய்தார் பெருந்தலைவர் காமராசர்.

பெருந்தலைவர் காமராசர் முதல்வராக இருந்து அறிவிப்பு வெளியிட்டாலும், உண்மையிலேயே வெற்றி பெற்றவர் தந்தை பெரியார் தான்.

1954 இல், தந்தை பெரியார் நடத்திய போராட்டத்தால் விரட்டி அடிக்கப்பட்ட குலக் கல்வித் திட்டம், இன்றைக்கு தேசிய கல்விக் கொள்கை-2020 மூலமாக மீண்டும் திணிக்கப் படுகிறது.

**கட்டுரையாளர் : ம.தி.மு.க. அரசியல் ஆய்வு மய்யச் செயலாளர், கோவை காரமடை ம.தி.மு.க. மாணவரணி பரப்புரையில் பேசியது**

(நிறைவு)

### சனாதனம் : ஆளுநர் ரவியின் முரண்பாடு

*‘சனாதன தர்மத்தை’ப் பரப்பி வரும் தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி, அந்த தர்மம், “வேதங்களை ஆழ்ந்து படித்த ரிஷிகள், முனிவர்கள் தந்தது” என்று பேசினார். ஆளுநர் இதற்காக நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டார். இப்போது, “சனாதன தர்மம் மதத்தோடு தொடர்புடையது அல்ல; அது பாரத தேசத்தின் முதுகெலும்பு” என்று குரலை மாற்றியிருக்கிறார்.*

*பெரியார் மண் இப்படி அவரை மாற்றிப் பேச வைத்திருக்கிறது.*

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# களப்பணியாளர் பயிலரங்கம்: ஒரு வேண்டுகோள்

2022 ஜூலை 23, 24, 25 ஆகிய மூன்று தினங்கள் கழகக் களப்பணி யாளர்களுக்கான பயிலரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட பொறுப்பாளர்கள் மற்றும் களப்பணியாற்றும் தோழர்கள் பங்கு பெறலாம். தோழர்கள் மாவட்ட பொறுப்பாளர்களின் ஒப்புதலுடன் மட்டுமே கலந்து கொள்ள வேண்டும்.

மாவட்டப் பொறுப்பாளர்கள் 07.07.2022 தேதிக்குள் தங்கள் மாவட்டத்தில் கலந்து கொள்ள விருப்பம் தெரிவிக்கும் தோழர்கள் பட்டியலை 97894 56485 என்ற எனது வாட்ஸ் அப் எண்ணிற்கு அனுப்புங்கள்.

குறைந்த அளவில் தோழர்களை வைத்து விரிவாக இப் பயிலரங்கம் நடத்திட தலைவர்,பொதுச் செயலாளர் இருவரும் திட்டமிட்டுள்ளதால் விரைவாக பெயர் பட்டியல் அனுப்பவும். அதிக தோழர்கள் இருப்பின் தலைமைக் குழு தேர்வு செய்யும் தோழர்கள் பயிலரங்கத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

பயிலரங்கம் திருச்சியில் ‘டி.எம்.எஸ்.எஸ்.’ நிறுவனத்துக்கான பயிற்சி அரங்கில் நடைபெறும்.

**– பால்.பிரபாகரன், பரப்புரைச் செயலாளர், திராவிடர் விடுதலைக்கழகம்**

# திருப்பூர் பெரியார் படிப்பகத்தில் ஜாதி மறுப்பு மண விழா

கிறிஸ்டினா - மகாதேவன் சாதி மறுப்பு இணையேற்பு நிகழ்வு, திருப்பூர் அம்மாபாளையம் தந்தை பெரியார் படிப்பகத்தில் 28.06.2022 அன்று மாலை 6.00 அளவில் நடைபெற்றது .

திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில் இராசு தலைமை வகித்தார். திருப்பூர் மாநகரத் தலைவர் தனபால் வரவேற்பு கூறினார். மாநகர அமைப்பாளர் முத்து,வேலம்பாளையம் பகுதி பொறுப்பாளர் மாரிமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு அறிவியல் மன்றம் தலைவர் சிவகாமி, ஆதித் தமிழர் பேரவை வழக்கறிஞர் அணி கனகசபை, தமிழ்நாடு மாணவர் கழகம் திருப்பூர் மகிழவன் ஆகியோர் வாழ்த்துரை வழங்க, யாழினி தமிழ்நாடு மாணவர் கழகம், மாதவன் நகர செயலாளர் திவிக, திலகவதி அம்மாபாளையம், மணிகண்டன், ஸ்ரீஜா, சண்முகம், சூப்பர் ஸ்டார் மக்கள் முன்னேற்ற கழகம் திருப்பூர் ஆகியோர் உட்பட தோழர்கள் மற்றும் மணமகன் உறவினர்கள் வாழ்த்தினார்கள். இணையர், கிறிஸ்டினா - சகாதேவன் நன்றி கூறினர்.

இறுதியாக இணையர், கழக வளர்ச்சி நிதியாக ரூபாய் இரண்டாயிரம் மாவட்டத் தலைவர் முகில் இராசுவிடம் வழங்கினர்.

# காமராசர் பிறந்த நாளில் சமூக நீதி பரப்புரை: திருப்பூர் கழகம் தீவிரம்

திருப்பூர் மாநகர திராவிடர் விடுதலைக் கழகக் கலந்தாய்வுக் கூட்டம் 27.06.2022 திங்கட் கிழமை மாலை 6.00 மணியளவில் திருப்பூர் வீரபாண்டி பிரிவு கழகப் பொருளாளர் துரைசாமி இல்லத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :

வரும் ஜூலை 15ஆம் தேதி காமராஜர் பிறந்த நாளை முன்னிட்டு ஜூலை 15 மற்றும் 18 ஆம் தேதிகளில் கீழ்கண்ட இடங்களில் பரப்புரை செய்வது என முடிவு செய்யப்பட்டது.

15.07.2022 - வெள்ளி : 1) அம்மாபாளையம், 2) மங்கலம், 3) குமரன் கல்லூரி, 4) மாஸ்கோ நகர்.

18.07.2022 - திங்கள் :1) பெருமாநல்லூர், 2) செங்கப் பள்ளி, 3) குன்னத்தூர்.

கூட்டத்தில் கழகப் பொருளாளர் துரைசாமி, மாவட்ட தலைவர் முகில் ராசு, மாநகர செயலாளர் மாதவன், மாநகர அமைப்பாளர் முத்து, தெற்கு பகுதி அமைப்பாளர் ராமசாமி, தோழர்கள் ராசசிங்கம், திலகவதி, மாரிமுத்து, அய்யப்பன் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் தாங்களாகவே உழைத்து வேலை செய்வதற்காக பஞ்சமி நிலங்கள் ஒதுக்கப் பட்டன. நில வருவாய்த் துறை தொடர்பான அதிகாரக் கட்டமைப்புகளுக்குள் ஜாதியக் கட்டமைப்புகள் புகுத்தப்பட்டன.

5. நாடு சுதந்திரம் பெற்ற பிறகும் நிலைமை மாற வில்லை. நில உரிமையிலிருந்து பெரும்பான்மை யான தலித்துகள் விலக்கி வைக்கப்பட்டனர்.

6. பசுமைப் புரட்சி வந்த பிறகும் நவீன தொழில் நுட்பங்கள் அறிமுகமானாலும் நிலைமையில் மாற்றமில்லை. சொல்லப்போனால் இந்திய கிராமங்களில் பசுமைப் புரட்சி, நில உடைமை யாளரான மேல் ஜாதியினர், நிலமற்ற ஒடுக்கப் பட்ட ஜாதியினரை அவர்கள் கட்டுப்பாட்டில் மீண்டும் உறுதியாக நிலைநிறுத்தியது.

7. 1990களில் நிலங்களிலிருந்து கிடைக்கும் உற்பத்தி குறைந்தபோது கட்டுமான நிறுவனங்கள், நில விற்பனையாளர்கள், நில உடைமையாளர்களின் இடத்தை தங்கள் வசமாக்கிக் கொண்டனர்., குடும்ப செல்வாக்கு, பாரம்பர்யப் பெருமை மற்றும் மூலதனத்தைக் கையாளுபவர்களிடம் தான் ‘ரியல் எஸ்டேட்’ தொழில் வந்து சேர்ந்தது. இந்த நிலையில் 1990களில் கொண்டு வரப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள் பெரும்பான்மை உழைக்கும் அடித்தட்டு ஜாதியினருக்கு பயன் தராமல் போயிற்று. விவசாயத் துறையில் ‘ஏகபோகமாக’ இருந்தவர்கள் உலக மயமாக்கல் எனும் பொருளாதாரக் கொள்கையால் தங்கள் அதிகாரத்தை இழந்து உள்ளனர். அதே நேரத்தில் விவசாயத் துறையில் நல்ல வருவாய் கிடைத்தவர்கள்கூட, தங்கள் அந்தஸ்தை தொழிலதிபர் நிலைக்கு உயர்த்திக் கொள்ள முடியவில்லை. விவசாய உற்பத்தியாளர்களாகவே நீடித்தனர். (இந்தியா வின் மேற்கு மற்றும் தெற்குப் பகுதியில் வாழ்ந்த நிலவுடைமை ஜாதிகள் மட்டும் விதிவிலக்காக இருந்தனர்)

8. இதற்கு இரண்டு காரணங்கள் முக்கியமானவை. வரலாற்று ரீதியாகக் கல்வி உரிமையை மறுத்தது ஒன்று. நவீன அறிவியல் தொழில்நுட்பத் துறைகளில் ஒடுக்கப்பட்ட ஜாதியினர் நுழைந்து விடாமல் உயர்ஜாதியினர் எழுப்பியுள்ள ‘மதில் சுவர்’. மற்றொரு காரணம், அண்மையில் அரியானா மற்றும் பஞ்சாப் மாநில ‘ஜாட்’ ஜாதியினர், மகாராஷ்டிராவில் மராத்தா ஜாதியினர், குஜராத்தில் பட்டேல் ஜாதியினர், தங்கள் ஜாதிக்கு உயர் கல்வியில் இடஒதுக்கீடு கேட்டு போராடியதை இதற்குச் சான்றாகக் குறிப்பிடலாம். வழக்கமான விவசாயத் தொழிலி லிருந்து அவர்கள் தங்களை விடுவித்துக் கொள்ள விரும்புகிறார்கள்.

9. தடையில்லாத பொருளாதார வளர்ச்சிக்கு, விவசாயத் துறையில் நிகழும் உற்பத்தி மிகவும் அவசியமாகிறது. அதற்கு இந்தத் துறையில் படித்தவர்களின் பங்கேற்பு இருந்தால் மட்டுமே நவீனத்துவத்தை நோக்கி நகர முடியும். இந்தியா இரண்டிலுமே தோல்வி அடைந்து நிற்கிறது. பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலிருந்தே கல்வி கட்டமைப்பை பாகுபாடுகளுக்கு உள்ளாகி, சில அறிவு ஜீவி குழுக்களுக்கான ஏகபோகமாக்கப் பட்டு விட்டது. குறிப்பாக பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலே உயர்ஜாதியினரில் ஒரு ஜாதிக் குழு இதில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கி விட்டது. பிரிட்டிஷாரின் நிர்வாகத்துக்கும் அவர்கள் தேவைப்பட்டார்கள்.

10. அரசியல் சட்டத்தின் முகப்புரை - கல்வியை அனைவருக்கும் பொதுவானதாக வலியுறுத்தி னாலும் அது இந்தியாவில் செயல்பாட்டுக்கு வராமல், (ஜாதியப்) பாகுபாடுகளுக்கு உட்படுத்தப் பட்டு வருவதை அரசியல் ஆய்வாளர் மெரோன் வெய்னர் சுட்டிக் காட்டுகிறார். கல்வியமைப்பில் உள்ள இந்த ஏற்றத் தாழ்வுகளும் (ஜாதிய) பாகுபாடுகளும் பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் வெளிப்படுகின்றன. உழைப்புக்கான ஊதியத்திலும் இது எதிரொலிக்கிறது.

11. உயர் கல்வியில் இடஒதுக்கீடு வரும் வரை அதிகாரம் நிறைந்த உயர் மட்டப் பதவிகள் ‘அறிவு ஜீவி’களின் ஆதிக்கப் பிடிக்குள் தான் இருந்தன. இதன் காரணமாகவே இந்தியா மென்பொருள் சேவைத் துறையில் மட்டும் (Software Service) உலக அளவில் வளர முடிகிறது. மாறாக, சீனா மற்றும் ஆசிய நாடுகள் சேவைத் துறையைக் கடந்து தயாரிப்பு மற்றும் உற்பத்தித் துறையில் முன்னேறி நிற்பதற்குக் காரணம், அடிப்படைக் கல்வியிலும், படிப்படியாக உயர் கல்வியிலும் அந்த நாடுகள் காட்டிய அக்கறையும் முதலீடுகளும் தான். இப்போதும் சீனா மற்றும் ஆசிய நாடுகளில் சிறு சிறு பொருள்களின் தயாரிப்புகளில் வளர்ந்து நிற்கின்றன. அதனால் கூடுதல் வேலை வாய்ப்புகளைப் பெற்று வருகின்றன. இந்தியா இதற்கு நேர்மாறாக உயர் தொழில் நுட்பம் நிறைந்த வேலைகளை உருவாக்கு வதில் பெரும் கவனம் செலுத்தி வருகிறது. இந்தியாவைப் பின்னுக்குத் தள்ளி விட்டு சீனா வேகமாக வளர்ந்து நிற்பதற்குக் காரணம், மனித வள உழைப்பு ஆற்றலை தயாரிப்புகளுக்குப் பயன்படுத்தியது தான். பரம்பரைத் தொழிலான விவசாயத்துக்கு முழுக்குப் போட்டுவிட்டு சீனாவில் கிராமப்புற தொழில் முனைவோர் ஏராளமான அளவில் உருவாகிவிட்டனர். காரணம், மனித வள ஆற்றலை முதலீடாக்கியதுதான். மாறாக, கிராமப்புற இந்தியாவில் இத்தகைய தொழில் முனைவோர், மிகச் சிறிய எண்ணிக்கையில்கூட இல்லாமல் போய் விட்டனர். ஏஷேங் ஹுவான் (Yasheng Huang) என்ற சீனப் பொருளாதார வல்லுனர் வெளியிட்ட கருத்து இது. (கிராமப் புறங்களில் வேர் பிடித்து நிற்கும் ஜாதியே கிராமப்புற உழைக்கும் மக்கள் உழைப்பு சக்தியை தொழில் முதலீட்டாக்கி அவர்களை தொழில் முனைவோராக உருவாக விடாது தடுத்து வருகிறது. -ஆர்)

12. ஜாதி உருவாக்கி வைத்துள்ள சமூக இணைப்பு, வணிகம் அதற்கான ஜாதிப் பிரிவுகளின் ஆதிக்கத்தில் தொடர்வது விவசாயத்தில் வருவாய் வந்தாலும் தொழில் துறையில் ஈடுபடாமல் தடுப்பது, எல்லாவற்றுக்கும் அடித்தளமாக இயங்குவது, ஜாதி தான்! இதில் தென் மாநிலங்கள் மட்டும் ஓரளவு மாறுபட்டிருப்பதற்குக் காரணம் வணிகத்துக்கான ‘வைசிய’ ஜாதி இங்கே இல்லை. (வடக்கே மட்டும் தான் இருக்கிறது)

மாறாக, தெற்கு ஆசிய நாடுகளில் நில உடைமை யாளர்களாக இருந்த விவசாயிகள், நகர்ப்புற தொழிலதிபர்களாக மாற முடிந்தது. அதற்குத் தடையில்லை. இந்தியாவில் பொருளாதாரத்தில் ஜாதியின் குறுக்கீடுகளே பொருளாதார வளர்ச்சிப் பாதையைத் தடுத்து சமூக மாற்றத்தை முடக்குகின்றன. இதில் ஜாதியின் பங்களிப்பைக் குறைத்து மதிப்பிட முடியாது. தீவிரமான ‘தீர்மானிக்கும் சக்தியாக’ அது இயங்கிக் கொண்டிருப்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். (Caste is not a residual variable but is an active agent which stifles economic transformation))

**– கட்டுரையாளர் இப்போது பிரவுன் பல்கலைக்கழகத்தில் தெற்காசிய நாடுகளின் ஆய்வுப் பிரிவில் – ஆய்வாளர்)**

**தமிழில் : ‘இரா’**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 1st July 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN